[1991 செப்டம்பர் 26

87—

வடகரை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

*1500 திரு. எஸ். நாகூர் மீரான்:

மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கடையநல்லூர் தொகுதியைச் சார்ந்த வடகரை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதியில் வடகரை, பண்பொழி அச்சன்புதூர் போன்ற பேரூராட்சிகளைச் சுற்றி அமைந்துள்ள கிராமம். அங்கு 10 ஆயிரத்துக்கு அதிகமான கால்நடைகள் உள்ளன. எனவே விவசாயிகளின் நலன் கருதி மாண்புமிகு கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் அங்கு ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதி மற்றும் கடையநல்லூர் தொகுதியில் 2 மருத்துவமனைகள் இருக்கின்றன. அதுபோல், 9 கிளை நிலையங்களும் இருக்கின்றன,

திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடகரையில் கால்நடை மருத்துவமனைக்கு இடம் தேர்வு செய்து உள்ளார்கள்; மருத்துவ அதிகாரிகள் அங்கே ஆய்வு செய்து இடம் தேர்வு செய்து உள்ளார்கள். பேரூராட்சியும் அதற்கு 2 ஏக்கர் நிலம் ஒதுக்கி உள்ளது. எனவே வரும் ஆண்டிலாவது அந்த கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தர நம்முடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1991 செப்டம்பர் 26]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய கருத்துருவை அனுப்பினால், கால் நடைப் பராமரிப்புத் துறை இயக்குநரின் பரிந்துரையைப் பெற்று, புரட்சித் தலைவியின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வனப்பகுதியில் காவலர் ஒருவர் கொலை செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். சிங்காரம், திரு. பெ. பொன்னுசாமி, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. எ. சம்பத், திரு. வி. தண்டாயுதபாணி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வனப் பகுதியில் வனத்துறை காவலர் ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்பது பற்றிய பிரச்சினை பற்றி விவாதிக்க இன்றைய பேரவை இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கோரி அறிவிப்பைக் கொடுத்து உள்ளார்கள். இது அவையை ஒத்திவைத்து விவாதிக்கும் அளவுக்கு எவ்வாறு அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்கக் கேட்டுக்கொள்கிறேன். திரு. சி. ஞான சேகரன்.

முற்பகல் 10 15

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் வாணியம் பாடி தாலுகாவிலே இருக்கிற ஆலங்காயம் சரகத்திலே கைலாசம் என்ற வனப் பாதுகாவலர் நரசிங்கபுரம் என்ற காட்டிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறபோது 4 பேர்கள் சந்தனக் கட்டைகளைக் கடத்தி இருக்கிறார்கள். சென்ற 20 ஆம் தேதி இந்த நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. அதை தடுப்பதற்காக கைலாசம் என்ற 35 வயது வாலிபர், அவர் எங்களுடைய கிராமத்தைச் சேர்ந்தவர். அவர் கடத்துவதைத் தடுத்தபோது அவரை அடித்து, உயிரோடு எரித்து இருக்கிறார்கள் சந்தனக் கடத்தல்காரர்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சந்தன கட்டைகளே இல்லாமல் போய் விடுமோ என்ற அளவுக்கு கடத்திவிட்ட சூழ்நிலையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற பிறகு இன்று மூன்று குற்றங்கள் தமிழகத்தில் ஓரளவுக்கு குறைந்திருக்கிறது. விடுதலைப்புலிகளை வேரறுத்து இருக்கிறார்கள். மதுவை ஒழித்து இருக்

[குறிப்பு; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]